## அருட்சோதி

அருட்சோதித் தெய்வம் எமை ஆண்டு கொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருள் சாரும் மறைகள் எல்லாம் போற்றுகின்ற தெய்வம்
பேதாந்தத் தெய்வம் உயர் நாதாந்தத் தெய்வம் (அருட்சோதி)

இருள் பாடு நீக்கி ஒளி ஈந்து அருளும் தெய்வம்
எண்ணியநாம் எண்ணியவாறு எமக்கு அருளும் தெய்வம்
தெருட் பாடல் உவந்து எமையும் சிவமாக்கும் தெய்வம்
சிற் சபையில் விளங்குகின்ற தெயவம் அதே தெய்வம்(அருட்சோதி)

## தில்லை அம்பல நடராஜா

தில்லை அம்பல நடராஜா – உன்
திரு அருள் வேண்டும் சிவராஜா (தில்லை..)
திரு நீல கண்ட ஜெகதீசா
தினமும் தொழுவோம் மகா தேவா (தில்லை..)

கயிலையில் வாழும் கைலாசா – எம்
கருத்தினில் வந்திடு சுக வாசா (தில்லை..)
தோடு அணி செவியுடை பெருமானே
பீடுடை பிரம்ம புரியோனே (தில்லை..)

கங்கை கொண்டாய் நடராசா
திங்கள் கொண்டாய் சதாசிவா
மங்கை கொண்டாய் மகேஸ்வரா – எம்
மனதில் இருப்பாய் மலைவாசா (தில்லை..)

பிச்சாண்டிக் கோல நடராஜா – எம்
பித்தம் தீர்ப்பாய் சுகவாசா
சாம்பல் உடலோய் சதாசிவா
சரணம் சரணம் மகா தேவா (தில்லை..)

நீ ஆடும் ஆட்டத்தில் நடராஜா
அகிலம் மயங்குது சிவராஜா
சூலம் ஆடுது ஜெகதீசா
டமருகம் முழங்குது சிவராஜா (தில்லை..)
சரணம் சரணம் சாம்பசிவா
சரணம் சரணம் சதாசிவா
சரணம் சரணம் மலை வாசா
சரணம் சரணம் மகா ஈசா (தில்லை..)